# தேச பக்தி
DHESA BAKTHI
நடுநிலை காலை நாளிதழ்
RNI.No.TNTAM/2022/86012
ஆசிரியர் : G. ராஜா 9842364068
இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779
★மலர்:05 ★இதழ்:146 ★26.09.2026 ★தமிழ் நாளிதழ் ★சனிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை
★Volume:05 ★Issue:146 ★26.09.2026 ★TamilDaily ★Saturday ★Page-4 ★Price-₹5/- Chennai





உலக சுற்றுலா தினம் 2026 முன்னிட்டு, தேனி மாவட்டம் தேனி நாடார் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சுற்றுலாத்துறை சார்பில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவியர்களுக்கு பெரியகுளம் சார் ஆட்சியர் திரு.தவலேந்து, இ.ஆ.ப., அவர்கள் பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

## உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்களில் ரூ.6,770 கோடிக்கு ஆட்சேபனைகள்: மாநில தணிக்கை அறிக்கையில் தகவல்

மாநகராட்சி, நகராட்சி,ஊராட்சிஅமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ரூ.6,770 கோடிக்கு 1.82 லட்சம் தணிக்கை ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டுள்ளதாக உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையின் 202425ம் ஆண்டுக்கானஒருங்கிணைந்த தணிக்கை அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் 202425ம் ஆண்டுக்கான தணிக்கையில், ரூ.6,770 கோடி மதிப்பிலான 1.82 லட்சம்நிதி ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டுள்ளன.

இதில் ரூ.1.28 கோடி மட்டுமே மீட்கப்பட்டுள்ளது. சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கையில், ரூ.163 கோடி மதிப்பிலான 54 முக்கிய ஆட்சேபனைகள் தனியாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அதில் ரூ.5.2 கோடி மீட்கப்பட்டுள்ளது.

மொத்தம் 4,229 நிறுவனங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டிய சூழலில், 4,217ல் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியில் திறந்த வெளி டெண்டர் இன்றி ரூ.20 கோடிக்கு ஒப்பந்தப் பணிகள் வழங்கப்பட்டுள்ளன.

துப்புரவுப் பணியாளர்களை அலுவலகப் பணிக்குப் பயன்படுத்தியதால் ரூ.4.12 கோடியும், மூடப்பட்ட உரமையங்களுக்குப் பராமரிப்புச் செலவு காட்டி ரூ.2.12 கோடியும் வீணடிக்கப்பட்டுள்ளது.

சென்னை தவிர பிற மாநகராட்சிகளில் வணிக நிறுவனங்களுக்கு குறைந்த குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை கட்டணம் வசூலித்ததால் ரூ.38.96 கோடிவருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதில் சேலத்தில் மட்டும் ரூ.32.49 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் ஓய்வூதியதாரர்கள் உயிருடன் உள்ளார்களா என சரிபார்க்காமலேயே ரூ.19.64 கோடி ஓய்வூதியம் தரப்பட்டுள்ளது.

மேலும், குறிப்பிட்ட திட்ட ஒதுக்கீட்டு நிதியில் இருந்து ரூ.10.67 கோடி வேறு கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளது. 7 பல்கலைக்கழகங்களில் ரூ.6.47 கோடி டிடிஎஸ் தொகையை வருமான வரித்துறையிடம் இருந்து திரும்பப் பெறாமல் விட்டுள்ளனர்.

மேலும், உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட நிறுவனங்களிடம் இருந்து அரசுக்கு வரவேண்டிய தணிக்கைக் கட்டணமாக ரூ.59.40 கோடி நிலுவையில் உள்ளது.

சென்னை மாநகராட்சியின் 202425ம் ஆண்டு பற்றாக்குறை ரூ.863 கோடியாகவும், திரட்டப்பட்ட பற்றாக்குறை ரூ.3,567 கோடியாகவும் இருந்துள்ளது. சென்னை தவிர 24 மாநகராட்சிகளின் திரட்டப்பட்ட பற்றாக்குறை ரூ.1,526 கோடியாகவும், கடன் பொறுப்பு ரூ.3,055.24 கோடியாகவும் உள்ளது.

137 நகராட்சிகளில் 109 நகராட்சிகள் பற்றாக்குறையில் இருந்துள்ளன.

எனவே, இத்தகைய தவறுகளுக்கு காரணமான நபர்கள் மீது நடவடிக்கை எடுத்து அரசு நிதியை மீட்க பரிந்துரை செய்யப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது.**

தேனி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தவர் அதிகம் வாழும் குடியிருப்புகள் வாரியாக வாழ்வாதார திட்டங்கள் செயல்படுத்தப்படும் தொடர்புடைய துறைகள் மூலம் விழிப்புணர்வு மற்றும் திட்டங்கள் பரப்புதல் தொடர்பான முகாம்கள் வரும் 28.09.2026 (திங்கள் கிழமை) முதல் 06.10.2026 (செவ்வாய்கிழமை) வரை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை சம்மந்தப்பட்ட ஊராட்சிகளில் கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது.

| வ. எண் | வட்டாரத்தின் பெயர் | கிராமம் மற்றும் குடியிருப்பு | முகாம் நடைபெறும் இடம் | நாள் |
|---|---|---|---|---|
| 1. | போடிநாயக்கனூர் | 1.**அணைக்கரைப்பட்டி** மேலப்பரவு | ஊ.ஒ.ஆ.பள்ளி, மேலப்பரவு | 28.09.2026 |
| | | 2.**அணைக்கரைப்பட்டி** சோலையூர் | ஊ.ஒ.ஆ.பள்ளி, சோலையூர் | 29.09.2026 |
| | | 3.**கொட்டகுடி** முட்டம் | ஊ.ஒ.ஆ.பள்ளி, முட்டம், | 30.09.2026 |
| | | 4. **அணைக்கரைப்பட்டி** முந்தல் | ஊ.ஒ.ஆ.பள்ளி, முந்தல் | 01.10.2026 |
| | | 5. **அகமலை** மருதநாயனூர் சொக்கன்அலை அலங்கரம் கரும்பாறை குறவன்குழி | மெயின்ரோடு (கண்ணங்கரை பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளி அருகில்) | 06.10.2026 |

மேற்காணும் முகாம்களில் தாட்கோ, மகளிர் திட்டம், மாவட்ட தொழில் மையம், காதி மற்றும் கிராம தொழில்கள் ஆணையம் & காதி மற்றும் கிராம தொழில்கள் வாரியம் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் (TIIC) ஆகிய அரசு துறைகள் கலந்து கொள்வதால் மேற்படி ஊராட்சிகளில் வசிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மக்கள் சொந்தமாக தொழில் தொடங்கவும், தொழிலினை விரிவுபடுத்திடவும் மானியத்துடன் கூடிய வங்கிக் கடனுதவி பெறுவதற்கு இம்முகாமினைப் பயன்படுத்திகொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# கண்ணீர் விடாதீர்கள்... நான் உங்களுடன் இருக்கிறேன்; வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு எம்.எல்.ஏ. ரூபா சசிதர் ஆறுதல்



கே.ஜி.எஃப்,

உரிகாம் ரயில் நிலையம் அருகே ரயில்வே மேம்பாலம் கட்டுமானத்திற்காக வீடுகள் இடிக்கப்பட்ட நிலையில், வீடுகளை இழந்து கண்ணீருடன் தவிக்கும் குடும்பங்களை கே.ஜி.எஃப் எம்.எல்.ஏ. ரூபா சசிதர் நேரில் சந்தித்து அவர்களின் வேதனையை கேட்டறிந்தார்.

"கண்ணீர் விடாதீர்கள்... நான் உங்களுடன் இருக்கிறேன். உங்களுக்கு மாற்று வீடு கிடைக்க அரசிடம் வலியுறுத்துவேன்" எனக் கூறி, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவர் ஆறுதல் தெரிவித்தார்.

வீடுகளை காலி செய்யும்போது, வீட்டில் இருந்த பொருட்களை எடுத்துச் செல்ல குறைந்தபட்சம் ஒரு மணி நேரமாவது அவகாசம் வழங்குமாறு அதிகாரிகளிடம் கெஞ்சியதாகவும், ஆனால்அதற்குள்ஜே.சி.பி. மூலம் வீடுகள் அகற்றப்பட்டதாகவும் குடும்பத்தினர் கண்ணீருடன் தெரிவித்தனர்.

"எங்கள் குழந்தைகள், வயதானவர்கள்எல்லாம் இருந்தார்கள்... எங்கள் பொருட்களைக் கூட முழுமையாக எடுத்துச் செல்ல முடியவில்லை. பல ஆண்டுகளாக வாழ்ந்த வீடு ஒரே நேரத்தில் இல்லாமல் போய் விட்டது. இப்போது நாங்கள் எங்கே செல்வது?" எனக் குடும்பத்தினர் வேதனையுடன் கூறினர். அவர்களின் அழுகுரலை அமைதியாக கேட்ட எம்.எல்.ஏ. ரூபா சசிதர், "வீடுகளை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், குடும்பங்களுக்கு தங்களது உடைமைகளை பாதுகாப்பாக எடுத்துச் செல்ல போதுமான அவகாசம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இதில் அதிகாரிகள் தவறு செய்துள்ளனர்" எனத் தெரிவித்தார்.

மேலும், வீடுகளை இழந்த குடும்பங்களை அரசு சிறப்பு வழக்காகக் கருதி மாற்று வீடுகள் வழங்க வேண்டும் என அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் கூறினார். ஆண்டர்சன்பேட், சுரஹள்ளி பகுதிகளில் அரசு வீட்டுத் திட்டத்தின் கீழ் காலியாக உள்ள வீடுகள் இருந்தால், அவற்றை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், உரிகாம் ரயில் நிலையத்திற்குப் பின்னால் உள்ள பஞ்சாபி லேஅவுட்டில் உள்ள வீடுகளை சீரமைத்து மீதமுள்ள குடும்பங்களுக்கு வழங்குவது குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எம்.எல்.ஏ. உறுதியளித்தார்.

மேலும், துயரத்தில் இருக்கும் குடும்பங்களுக்கு எம்.எல்.ஏ. ரூபா சசிதர் நேரில் நிதியுதவி வழங்கி, "இந்த இக்கட்டான நேரத்தில் உங்களைத் தனியாக விட்டு விட மாட்டேன்" என உறுதியளித்தார்.

பல ஆண்டுகளாக தங்களது குடும்பங்கள் வாழ்ந்த வீடுகளை இழந்து நின்ற மக்களின் கண்ணீரும், அவர்களின் கதறலும் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. "வீடு போயிருக்கலாம்... ஆனால் நீங்கள் தனியாக இல்லை. உங்களுக்காகநான்இருக்கிறேன்" என்ற எம்.எல்.ஏ. ரூபா சசிதரின் ஆறுதல் வார்த்தைகள், வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு அந்த நேரத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தியது.

### தேசிய நெடுஞ்சாலை ஒட்டி நிலம் வாங்குவோர் கவனத்திற்கு...

# உச்ச நீதிமன்றத்தின் புதிய 'செட் பேக்' விதியும்... திண்டுக்கல் குமுளி நெடுஞ்சாலை நிலவரமும்

பொதுவாக தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்படும்போது இந்திய சாலைகள் காங்கிரஸின் (IRC) தரநிலைகளின்படி நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. நான்கு வழிச்சாலையாக இருந்தால் 45 மீட்டர் அகலத்திற்கும், எதிர்கால போக்குவரத்து விரிவாக்கத்தை கருத்தில் கொண்டு ஆறு வழிச்சாலையாக மாற்றப்படவுள்ள இடங்களில் 60 மீட்டர் அகலத்திற்கும் நிலம் கையகப்படுத்தப்படுவது வழக்கமாகும். அந்த வகையில், திண்டுக்கல் தேனி சின்னமனூர் வழியே குமுளி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் (NH183) நகர்ப்புற நெரிசலைத் தவிர்க்க அமைக்கப்பட்டுள்ள புறவழிச்சாலைகளுக்காக 60 மீட்டர் அகலத்திற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் தற்போது நிலவில் பயன்பாட்டில் இருக்கும் தார்ச்சாலை என்பது 10 மீட்டர் அகலம் கொண்ட இருவழிச்சாலையாக மட்டுமே உள்ளது. ஆனால், மீதமுள்ள பகுதிகள் எதிர்கால விரிவாக்கத்திற்காக ஒதுக்கப்பட்டு, மொத்தம் 60 மீட்டர் அகல பரப்பு தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் (NHAI) அதிகாரப்பூர்வ எல்லைக்குள் உள்ளது. நாடளவில் தேசிய நெடுஞ்சாலைகளில் அதிகரித்து வரும் பயங்கர சாலை விபத்துகளை தடுக்கவும், விதிமீறிய ஆக்கிரமிப்புகளை அகற்றவும் உச்ச நீதிமன்றம் தானாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த மேல்முறையீட்டு வழக்கில் (Suo Moto Writ Petition (Civil) No. 9 of 2025 In Re: Phalodi Accident Case) கடந்த 13 ஏப்ரல் 2026 அன்று நீதிபதிகள் ஜே.கே. மகேஸ்வரி மற்றும் அதுல் எஸ். சந்துர்கர் ஆகியோர் அடங்கிய அமர்வு ஒரு மிக முக்கிய இடைக்கால தீர்ப்பை வழங்கியது. அந்த தீர்ப்பின்படி, தேசிய நெடுஞ்சாலையில்புதியகுடியிருப்புகள் அல்லது வீடுகள் கட்டுவதாக இருந்தால் சாலையின் மையக் கோட்டிலிருந்து (Centreline) 40 மீட்டர் இடைவெளி விட்டே கட்டப்பட வேண்டும். அதேபோல கடைகள், ஹோட்டல்கள், ஷோரூம்கள் உள்ளிட்ட வணிக கட்டிடங்களாக இருந்தால் சாலையின் மையக் கோட்டிலிருந்து 75 மீட்டர் இடைவெளி விடப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த இடைவெளி கணக்கீடு என்பது தார் சாலையின் ஓரத்திலிருந்து அல்ல; மாறாக கையகப்படுத்தப்பட்ட மொத்த சாலையின் நடுக் கோட்டிலிருந்தே (Midpoint / Centreline) அளவிடப்படுகிறது. உதாரணமாக, திண்டுக்கல் குமுளி தேசிய நெடுஞ்சாலை புறவழிச்சாலையில் 60 மீட்டர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதால், சாலையின் மையக் கோட்டிலிருந்து இருபுறமும் 30 மீட்டர் நிலம் ஏற்கெனவே அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே, இச்சாலையை ஒட்டியுள்ள பட்டா நில உரிமையாளர்கள் வீடு கட்டுவதாக இருந்தால் அரசின் 30 மீட்டர் எல்லை முடிந்த பிறகு, மேலும் 10 மீட்டர் (சுமார் 33 அடி) தள்ளி மட்டுமே வீடு கட்ட முடியும். அதுவே கடை அல்லது வணிக வளாகம் கட்டுவதாக இருந்தால், அரசின் 30 மீட்டர் எல்லை முடிந்த பிறகு மேலும் 45 மீட்டர் (சுமார் 148 அடி) தள்ளி மட்டுமே கட்ட அனுமதிக்கப்படும். அதேசமயம் 45 மீட்டர் அகலம் மட்டுமே கையகப்படுத்தப்பட்ட பிற பகுதிகளில், அரசின் 22.5 மீட்டர் எல்லை போக, சொந்த பட்டா நிலத்தில் வீட்டிற்கு 17.5 மீட்டரும் (57 அடி), கடைகளுக்கு 52.5 மீட்டரும் (172 அடி) இடைவெளி விட வேண்டியிருக்கும். உச்சநீதிமன்ற உத்தரவின்படி, இந்த 40 மீட்டர் மற்றும் 75 மீட்டர் பாதுகாப்பு மண்டலத்திற்குள் அமைந்திருக்கும் விவசாய நிலங்களை குடியிருப்பு அல்லது வணிக மனைகளாக மாற்ற நிலப் பயன்பாட்டு மாற்றம் (Land Conversion) செய்ய சட்டப்பூர்வத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த எல்லைக்குள் அமையும் கட்டிடங்களுக்கு நகராட்சிகளோ, ஊராட்சிகளோ அல்லது DTCP அமைப்போ புதிய கட்டிட அனுமதியோ (Plan Approval) அல்லது தொழில்உரிமமோ (Trade Licence) வழங்க முடியாது. உச்ச நீதிமன்றத்தின் (Suo Moto WP No. 9/2025) இந்த உத்தரவிற்கு இன்றைய தேதி வரை எந்த வித இடைக்கால தடையும் (Stay) விதிக்கப்படவில்லை என்பதால், இது தமிழ்நாடு உட்பட இந்தியா முழுமைக்கும் செல்லுபடியாகும் சட்ட விதியாக நடைமுறையில் உள்ளது.




நிலப்பரப்பு குறைவாகவும் மக்கள் தொகை அடர்த்தி அதிகமாகவும் உள்ள கேரளாவில் இதனால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், அம்மாநில அரசு உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது.

எனவே, "அரசு ஏற்கெனவே 60 மீட்டர் எடுத்து விட்டது, தற்போது 10 மீட்டர் தார் ரோடுதானே உள்ளது, பக்கத்திலேயே வீடு கட்டலாம்" என்று ரியல் எஸ்டேட் இடைத்தரகர்கள் கூறும் போலி வாக்குறுதிகளை பொது மக்கள் எக்காரணம் கொண்டும் நம்பக் கூடாது. அரசு மீண்டும் நிலத்தை கையகப்படுத்துகிறதோ இல்லையோ, சாலையின் மையக் கோட்டிலிருந்து 40m / 75m இடைவெளிக்குள் புதிய கட்டிடம் கட்ட உச்ச நீதிமன்றத் தடை உள்ளது என்பதுதான் உண்மை. விதிமீறி கட்டப்படும் கட்டிடங்களுக்கு DTCP அனுமதி கிடைக்காது என்பதோடு, வருங்காலத்தில் NHAIயால் எந்தவித இழப்பீடும் இன்றி இடிக்கப்படவும் வாய்ப்புள்ளது. எனவே, தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள நிலங்களை வாங்குவதற்குமுன், உரிமம்பெற்ற நில அளவையர் மூலம் சாலையின் மையக் கோட்டிலிருந்து உள்ள தூரத்தை சரிபார்த்து, சட்டப்பூர்வ அனுமதிகளை உறுதி செய்த பின்னரே பொதுமக்கள் முதலீடு செய்ய வேண்டும்.

தேசபக்தி

26.09.2026சனிக்கிழமை

# திருவத்திபுரம் நகராட்சியில் குப்பைகள் தரம் பிரித்து வழங்குவது குறித்து ஆலோசனைக்கூட்டம்

செய்யாறு :,செப்.26

குப்பைகள் தரம் பிரித்து வழங்குவது குறித்து ஆலோசனைக் கூட்டம் திருவத்திபுரம் நகராட்சியில் நடைபெற்றது பெற்ற ஆலோசனைக் கூட்டத்திற்கு நகர மன்றத் தலைவர் ஆ.மோகனவேல் தலைமைத் தாங்கினார். நகராட்சி ஆணையாளர் எஸ்.ஆண்ரூஸ் முன் பிரித்து வழங்குவது குறித்தும், குப்பைகளை தெருக்களில் கொட்ட கூடாது என்பது குறித்து தெரிவித்தனர்.நகர வியாபாரிகள் சங்க நிர்வாகிகள், வணிகர்



திருவண்ணாமலை மாவட்டம் திருவத்திபுரம் (செய்யாறு) நகராட்சியில் குப்பைகள் தரம் பிரித்து வழங்குவது குறித்து ஆலோசனைக் கூட்டம்வெள்ளிக்கிழமை நடைபெற்றது. திருவத்திபுரம் நகராட்சி அலுவலகத்தில் நடை னிலைவகித்தார்.துப்புரவு ஆய்வாளர் கே மதனராசன் அனைவரையும் வரவேற்றார். இக்கூட்டத்தின் போது, திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 ன் படி குப்பைகள் தரம் பிரித்து வழங்குவது குறித்தும், குப்பைகளை நான்கு வகைகளாக தரம் கள் சங்க நிர்வாகிகள் குடியிருப்போர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பல்வேறு வியாபாரி கள் சங்க நிர்வாகிகள் மற்றும் வணிக பெருமக்கள் குடியிருப்போர் நல சங்க நிர்வாகிகள் என பலர் கலந்துக் கொண்டனர்.



# டி. கல்லேரி ஊராட்சியில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்

திருவண்ணாமலை :செப்.26

திருவண்ணாமலை ஒன்றியம் வெறையூர் அடுத்த டி.கல்லேரி ஊராட்சியில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில்சிறப்புகால்நடைசுகாதாரமற்றும்விழிப்புணர்வு முகாம் இன்று(25.09.2026) நடந்தது. திருவண்ணாமலை உதவி இயக்குனர் முருகன் கலந்து கொண்டு முகாமினை தொடங்கி வைத்து சிறந்த கிடாரி கன்றுகளை வளர்த்த கால்நடை உரிமையாளர்களுக்கு சிறப்பு பரிசுகளை வழங்கி பேசினார்.முகாமில் கால்நடை மருத்துவர் ராஜ்குமார் தலைமையில் கால்நடை ஆய்வாளர் விஜயா கால்நடை பராமரிப்பு உதவியாளர் ஆதிமூலம் செயற்கை முறை கருவூட்டலர்கள் மோகன் மற்றும் சங்கர் ஆகியோர் கொண்ட மருத்துவ குழுவினர் சுமார் 750 கால்நடைகளுக்கு தடுப்பூசி, செயற்கை முறை கருவூட்டல் குடற்புழு நீக்கம் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகளை மேற்கொண்டனர்.மேலும் கால்நடை உரிமையாளர்களுக்கு தீவன விதைகள் மற்றும் தாது உப்புகள் இலவசமாக வழங்கப்பட்டது.முடிவில் கால்நடை ஆய்வாளர் விஜயா நன்றி கூறினார்.

# இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், 12 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றும், தேர்ச்சி பெறாமலும் உயர்கல்வியில் சேராமல் இருந்த மாணாக்கர்களை கண்டறிந்து, அதில் 52 மாணவ மாணவியர்களுக்கு உயர்கல்வி சேர்க்கைக்கான ஆணையினை வழங்கினார்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர்திருமதி.ந.ப்ரியாரவிச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள்12 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றும், தேர்ச்சி பெறாமலும் உயர்கல்வியில் சேராமல் இருந்த மாணாக்கர்களை கண்டறிந்து, அதில் 52 மாணவ மாணவியர்களுக்கு உயர்கல்வி சேர்க்கைக்கான ஆணையினை வழங்கினார்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர்திருமதி.ந.ப்ரியாரவிச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (25.9.2026) மாவட்ட முதன்மை கல்வி அலுவலக கூட்டரங்கில் பள்ளிக் கல்வித் துறை மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் அரசுப் பள்ளிகளில் கடந்த 202425 மற்றும் 202526 ஆம் கல்வி ஆண்டுகளில் 12 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றும், தேர்ச்சி பெறாமலும் உயர்கல்வியில் சேராமல் இருந்த மாணாக்கர்களை அடையாளம் கண்டு உயர்வுக்குப் படி (2026 27), உயர்வுக்கு வழிகாட்டி என்ற நேரடி சேர்க்கை முகாம் நடத்தப்பட்டது.

இராணிப்பேட்டை மாவட்டத்தில் ஆற்காடு, காவேரிப்பாக்கம், திமிரி, வாலாஜா கிழக்கு மற்றும் வாலாஜா மேற்கு வட்டாரங்களை சார்ந்த 800 மாணவர்களை தொடர்பு கொண்டு முகாமிற்கான தகவல் தெரிவிக்கப்பட்டது. அதில் முகாமிற்கு வருகை தந்த 250 மாணவர்களில் 52 மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் உயர்கல்வி சேர்க்கைக் கான ஆணை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு நிகழ்வாக, தூய்மைப் பணியாளர்களாக பணிபுரிந்து வரும் மணிவண்ணன் அஸ்வினி தம்பதியரின் மகன் விஷ்ணுப்பிரியன் உயர்கல்வி பயில ஊக்குவிக்கப்பட்டார். இவரது சகோதரி மாற்றுத் திறனாளி என்பது குறிப்பிடத்த க்கது.

இத்தகைய சூழலிலும் கல்வியில் ஆர்வம் காட்டி வரும் மாணவன் விஷ்ணுப்பிரியன். குளோபல் இன்ஸ்டிடியூட் ஆஃப் பாராமெடிக்கல் கல்லூரியில் ஆபரேஷன் தியேட்டர் (Operation Theatre) படிப்பில் சேர்வதற்கான கல்விக்கட்டணத்தொகையாக ரூ.5,000/ னை மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். மாணவர்களின் பள்ளிக் கல்வி மற்றும் கல்லூரிக் கல்வியை ஊக்கப்படுத்தும் விதமாக இந்நிகழ்ச்சி அமைந்தது. முகாமில் பங்கேற்ற மாணவர்களுக்கு உயர்கல்வியின் அவசியம் குறித்து கல்லூரி பேராசிரியர்கள், மாவட்டவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன அலுவலர் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி பேராசிரியர்கள் கல்வியின்முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மாணவர்களுக்கு மாவட்ட முன்னோடி வங்கி மூலம் கல்வி கடன் சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அரசு பள்ளியில் படித்து நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று மருத்துவ படிப்பில் சேர்ந்த மாணவன் சுனில்குமார் அவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் ஊக்கப்படுத்தினார். உயர்கல்வி வழிகாட்டல் ஆசிரியர்கள் மூலமாக 100% உயர் கல்வியில் சேர்க்கை உறுதி செய்ய வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில்முதன்மை கல்வி அலுவலர் திருமதி. மோகனா, திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் திரு. பெரியசாமி, மாவட்ட சமூக நலன் அலுவலர்திருமதி.பாலசரஸ்வதி, மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் உதவி திட்ட அலுவலர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன். இ.ஆ.ப., திமிரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் துறை சார்பில் நடைபெற்ற மருத்துவம் மற்றும் ஊட்டச்சத்து முகாமில் குழந்தைகளின் உணவு பழக்க வழக்கங்கள் பற்றியும். ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை குழந்தைகளுக்கு வழங்குமாறு தாய்மார்களுக்கு அறிவுரை வழங்கினார். உடன் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் மாவட்ட திட்ட அலுவலர் செல்வி.சாந்தி பிரியதரிசினி. மாவட்ட சுகாதார அலுவலர் செந்தில் குமார் மற்றும் பலர் உள்ளனர்.

# eKYC புதுப்பிக்காத 1.10 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வாய்ப்பு; நாளை சிறப்பு முகாம் ஆட்சியர் வந்தனா கார்க் அறிவிப்பு

திருவண்ணாமலை:செப்.26

திருவண்ணாமலை மாவட்டத்தில் குடும்ப அட்டைகளில் இடம்பெற்றுள்ளஉறுப்பினர்களின்ஆதார் விவரங்களைஉறுதி செய்யும் வகையில் நடைபெற்று வரும் eKYC பதிவை புதுப்பிக்காதவர்களுக்காக செப்டம்பர் 26ஆம் தேதி சிறப்பு முகாம் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம்–2013ன் கீழ் வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளில் இடம் பெற்றுள்ள அனைத்து உறுப்பினர்களின் ஆதார் விவரங்களையும் உறுதி செய்வதற்காக, இந்திய அரசின் அறிவுறுத்தலின்படி விரல் ரேகை அடிப்படையிலான eKYC பதிவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் இதுவரை 95.34 சதவீத eKYC பணிகள் நிறைவடைந்துள்ளன. இன்னும் 1,10,023 பேர் eKYC பதிவை கைரேகை மூலம் புதுப்பிக்க வேண்டியுள்ளது.

எனவே, eKYC செய்யாத குடும்ப அட்டைதாரர்கள் தங்களது குடும்ப அட்டையுடன் சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைக்கு நேரில் சென்று கைரேகை பதிவு செய்து eKYCஐ புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தியுள்ளார்.

கைரேகை பதிவு சரியாக விழாதவர்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உள்ளிட்டோர் முதலில் தங்களது ஆதார் அட்டையில் விரல் ரேகை மற்றும் கண் கருவிழிப் பதிவை புதுப்பித்த பின்னரே eKYC பதிவு செய்ய முடியும். இதற்காக சம்பந்தப்பட்ட வட்டங்களில் செயல்பட்டு வரும் ஆதார் மையங்களை அணுகி ஆதார் விவரங்களை புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

ஆதார் விவரங்களை புதுப்பித்த பின்னர், சம்பந்தப்பட்ட குடும்ப உறுப்பினர் குடும்ப அட்டையுடன் நியாய விலைக் கடைக்கு சென்று eKYC பதிவை மேற்கொள்ளலாம். இதற்காக ஏற்கனவே ஆகஸ்ட் 2, 8, 9, 29 மற்றும் செப்டம்பர் 19 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. அந்த முகாம்களில் பங்கேற்கத் தவறியவர்கள் மற்றும் இதுவரை eKYC பதிவை புதுப்பிக்காதவர்கள் செப்டம்பர் 26 ஆம் தேதி (சனிக்கிழமை) நடைபெறும் சிறப்பு முகாமை பயன்படுத்தி eKYC பதிவை கட்டாயம் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர்வந்தனாகார்க்கேட்டுக்கொண்டுள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., மாவட்ட முதன்மை கல்வி அலுவலக கூட்டரங்கில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற உயர்வுக்குப் படி (2026,27), உயர்வுக்கு வழிகாட்டி முகாமில் இராணிப்பேட்டை மாவட்டம் சக்கரமல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயின்று குளோபல் பாரா மெடிக்கல் நிறுவனத்தில் ஆய்வக உதவியாளர் பாடப்பிரிவில் சேர்க்கைப் பெற்ற மாற்றுத்திறனாளி மாணவர் தினேஷ்குமார் அவர்களுக்கு சேர்க்கை ஆணையினை வழங்கினார்கள். உடன் முதன்மை கல்வி அலுவலர் M.மோகனா மற்றும் மாவட்ட கல்வி அலுவலர் துரைவேல் மற்றும் பலர் உள்ளனர்

# பெரியகுளத்தில் பிரம்மாண்டமாக திறக்கப்பட்டது வசந்த் & கோ புதிய கிளை

## தங்க நாணயம் உள்ளிட்ட அதிரடி சலுகைகளால் வாடிக்கையாளர்கள் உற்சாகம்

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் பிரபல வீட்டு உபயோக பொருள் விற்பனை நிறுவனமான வசந்த் & கோவின் புதிய கிளை இன்று கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் கிளைகளை பரப்பி வீட்டு உபயோக பொருட்கள் விற்பனையில் முன்னணி வகிக்கும் இந்நிறுவனத்தின் இப்புதிய கிளையினை, வசந்த் & கோ தலைவி தமிழ்ச்செல்வி வசந்தகுமார் ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கேற்றி முறைப்படி தொடங்கி வைத்தார்.

இப்புதிய கிளையின் திறப்பு விழாவை முன்னிட்டு வாடிக்கையாளர்களை கவரும் வகையில் பல்வேறு சிறப்பு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, ₹25,000 க்கும் அதிகமான தொகைக்கு பொருட்கள் வாங்கும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தங்க நாணயம் பரிசாக வழங்கப்படும் என்றும், அதுமட்டுமன்றி பொருட்கள் வாங்கும் ஒவ்வொருவருக்கும் உறுதிசெய்யப்பட்ட சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதனால் திறப்பு விழாவன்று ஏராளமான வாடிக்கையாளர்கள் புதியகிளையில்திரண்டு, தங்களுக்கு தேவையான நவீன வீட்டு உபயோக பொருட்களை மிகுந்த ஆர்வத்துடன் பார்வையிட்டும், சிறப்பு சலுகைகளை பயன்படுத்தி வாங்கி சென்றும் வருகின்றனர்.

# செய்யாறில் மழைக்கால முன்னெச்சரிக்கை நடைவடிக்கையாக காய்ச்சல் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம்



செய்யாறு :செப்.26

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் மழைக்கால முன்னெச்சரிக்கை நடைவடிக்கையாக காய்ச்சல் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம் நேற்று நடந்தது.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு நகராட்சிக்கு உட்பட்ட 2வது வார்டில் நேரு நகர் பகுதியில்மழைக்காலமுன்னெச்சரிக்கை நடைவடிக்கையாக காய்ச்சல் கண்டறியும் சிறப்பு மருத்துவ முகாம் நேற்று நடைபெற்றது. இம்முகாமினை நகரமன்ற தலைவர் ஆ. மோகனவேல் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். நகராட்சி ஆணையாளர் செ.ஆண்ரூஸ் முன்னிலை வகித்தார். துப்புரவு ஆய்வாளர் கே.மதன ராசன் வரவேற்றார் நகர்புர ஆரம்ப சுகாதார மருத்துவ அலுவலர் சூர்யா தலைமையிலான மருத்துவ குழுவினர் சுகாதார ஆய்வாளர் ராம்குமார் மற்றும் பொது சுகாதார பணியாளர்கள் காய்ச்சல், சளி, சர்க்கரை நோய் மற்றும் ரத்தக்கொதிப்பு ஆகியவற்றிற்கும் அடிப்படை உபாதைகளுக்கும்சிகிச்சைசிகிச்சை அளித்தனர். காய்ச்சல் உள்ளிட்ட பல்வேறு மழைப்பொழிவு கால நோய் கண்டறியப்பட்டவர்களுக்கு மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன. இம்முகாமினை நகராட்சி களப்பணி உதவியாளர், மக்களை தேடி மருத்துவ தன்னார்வலர்கள் மற்றும் நகராட்சி கொசு ஒழிப்பு பணியாளர்கள் கலந்து கொண்டு மக்களுக்கு மருத்துவ பணிகள் மேற்கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் நலன் காக்கும் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ந.சரவணன், வேளாண்மை இணை இயக்குநர் செ.சுந்தரம், கால்நடை பராமரிப்பு துறை மண்டல இயக்குநர்திருமாறன். கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் பிராபாகரன், மாவட்ட வன அலுவலர் சிவக்குமார். வேளாண் அறிவியல் மைய உதவி பேராசிரியர் எம். பரமசிவம், தோட்டக்கலை துணை இயக்குநர் சிந்தியா மற்றும் பலர் உள்ளனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே நெய்க்காரப்பட்டி பெரிய பள்ளிவாசல் அருகே காவேரி குடிநீர் குழாய் உடைந்து குடிநீர் சாலையில் பெருக்கெடுத்து வீணாகி வருகின்றன தற்போது உள்ள சூழலில் மழை இன்றி காரணமாக இப்படி குடிநீர் வீணாவதை பொதுமக்கள் மற்றும் சண்முக ஆழ்வார்கள் வேதனை அடைந்துள்ளனர் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து இக்கு குழாய் உடைப்பு சரி செய்யும்படி பொதுமக்கள் சார்பாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்

# “தேர்தல் பணிகளை முடக்கவே சோதனை; லஞ்சமும் இல்லை, ஊழலும் இல்லை!” - சி.என்.அண்ணாதுரை

திருவண்ணாமலை செப்.26

திருவண்ணாமலை மக்களவைத் தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை வீட்டில் நடைபெற்ற லஞ்ச ஒழிப்புத் துறை சோதனை குறித்து, “தேர்தல் பணிகளை முடக்குவதற்காகவே இந்தச் சோதனை நடத்தப்பட்டுள்ளது; இங்கு லஞ்சமும் இல்லை, ஊழலும் இல்லை” என்று சி.என். அண்ணாதுரை தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் வேங்கிக்கால் தென்றல் நகர் பகுதியில் உள்ள தனது வீட்டில் நேற்று காலை 7 மணி முதல் பிற்பகல் 3 மணி வரைசுமார் 8 மணி நேரம்





லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். வேலூர் துணைக் காவல் கண்காணிப்பாளர் சங்கர் தலைமையில் ஆய்வாளர்கள் மைதிலி, அருள்பிரசாத் உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட போலீஸார் சோதனையில் ஈடுபட்டனர்.

சோதனை முடிவடைந்த நிலையில் செய்தியாளர்களை சந்தித்த சி.என்.அண்ணாதுரை கூறியதாவது:

“அதிகாரிகள் இளைஞர்அணி மாநாடு தொடர்பாக பேச வேண்டும் என்று தெரிவித்தனர். கடந்த ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற வடக்கு மண்டல திமுக இளைஞர்அணி மாநாடு குறித்து அவர்கள் கேள்வி எழுப்பினர். அந்த மாநாடு முன்னாள் முதலமைச்சர் ஸ்டாலின், அமைச்சர்கள் உள்ளிட்டோர் பங்கேற்புடன் நடைபெற்றது. அனைத்து துறைகளிடமும் முறையாக அனுமதி பெற்று தான் மாநாடு நடத்தப்பட்டது என்பதை அதிகாரிகளிடம் தெரிவித்தேன்.

அதேபோல், எனது உறவினர்கள் நடத்தி வரும் ஏபியு கட்டுமான நிறுவனம் தொடர்பாகவும் அதிகாரிகள் விசாரணை நடத்தினர். அந்த நிறுவனமும் முறையான அனுமதிகளைப் பெற்றே செயல்பட்டு வருகிறது. நிறுவனம் தொடர்பான ஆவணங்களை அதிகாரிகள் கேட்டனர். அவர்கள் கேட்ட அனைத்து ஆவணங்களும் முறையாக வழங்கப்பட்டுள்ளன.

இடைத்தேர்தல் நடைபெறும் இந்த நேரத்தில் உள்நோக்கத்துடன் இந்தச் சோதனை நடத்தப்பட்டுள்ளது. என்னை தேர்தல் பணிகளுக்குச் செல்லவிடாமல் தடுப்பதுதான் இதன் முக்கிய நோக்கம் என்று கருதுகிறேன்.

இங்கு லஞ்சமும் இல்லை; ஊழலும் இல்லை. லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் வந்ததால் மட்டும் இங்கு தவறு நடந்துவிட்டதாக அர்த்தமில்லை. அதிகாரிகள் கேட்ட கேள்விகளுக்கு முறையாக பதில் அளித்துள்ளோம். அவர்கள் கேட்ட ஆவணங்கள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. சட்டத்திற்கு புறம்பாக எந்த நடவடிக்கையும் நடைபெறவில்லை. அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டே அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேர்தல் பணிகளை முடக்குவதற்காகவே இந்தச்சோதனை நடத்தப்பட்டுள்ளது” என்று சி.என்.அண்ணாதுரை தெரிவித்தார்.

சுமார் 8 மணி நேரம் நடைபெற்ற இந்தச் சோதனை மற்றும் அதனைத் தொடர்ந்து சி.என். அண்ணாதுரை அளித்த விளக்கம் திருவண்ணாமலை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., மாவட்ட முதன்மை கல்வி அலுவலக கூட்டரங்கில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற உயர்வுக்குப் படி (2026,27). உயர்வுக்கு வழிகாட்டிமுகாமில்தூய்மைப்பணியாளர்களாகபணிபுரிந்துவரும்மணிவண்ணன் அஸ்வினி தம்பதியரின் மகன் விஷ்ணுப்பிரியன் அவர்களின் உயர்கல்வி பயில்வதற்கான கட்டணம் தொகை ரூ.5,000/ னை வழங்கினார். உடன் முதன்மை கல்வி அலுவலர் மோகனா. திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் பெரியசாமி. மாவட்ட சமூக நலன் அலுவலர் பாலசரஸ்வதி, மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் உதவி திட்ட அலுவலர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




திண்டுக்கல் மாவட்டம் பழனி நகராட்சி உட்பட்ட திரு ஆவினன்குடி திருக்கோயில் எதிர்புறம் உள்ள ஜவஹர் வீதியில் மற்றும் அருள்ஜோதி வீதியில் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்படும் சூழலில் கடைகள் பிளாட் பாடங்களில் ஆக்கிரமித்து கடைகள் வைத்துள்ளனர் இதனால் போக்குவரத்து மிகவும் சிரமத்துக்கு உள்ளாகின்றன,

ஆகையால் சமூக ஆர்வலர்கள் மற்றும் பக்தர் ஜோடிகள் பொதுமக்கள் கோரிக்கையை ஏற்று இன்று பழனி பெருந் நகராட்சி சார்பாக ஆக்கிரமிப்புகளை அகற்றி மற்றும் ஜேசிபி இயந்திரம் மூலம் நகராட்சி அதிகாரிகள் மற்றும் நகராட்சி ஊழியர்கள் ஒன்று சேர்ந்து இந்த இடையில் உள்ள கடைகளே அப்புறப்படுத்திக்கொண்டிருக்கின்றனர்,





# இராணிப்பேட்டையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளின் பொதுப் பிரிவினருக்கான கபடி போட்டிகளை, மண்டல முதுநிலை மேலாளர், திருவண்ணாமலை சாந்தி அவர்கள் துவக்கி வைத்தார்கள். மேலும், மாவட்ட விளையாட்டரங்கம் கட்டிடப் பணிகளை நேரில் பார்வையிட்டு, பணிகள் தொடர்பாக தேவையான அறிவுரைகளை வழங்கினார்கள் முன்னதாக பெண்கள் பொது பிரிவினருக்கான கபடி போட்டியில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கங்களை இராணிப்பேட்டை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ச.ஞானசேகரன் அவர் கள் வழங்கினார்.

## சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக சார்பில்

# மதுராந்தகம் பசுவங்கரணை, கீழாமூர் ஊராட்சியில் வீடு வீடாகச் சென்று தீவிர வாக்கு சேகரிப்பு



செங்குன்றம், செப்டம்பர் 26:

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆலோசனைபடி மதுராந்தகம் இடைத்தேர்தல் திமுக வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்தில் மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி.துக்காராம், செங்குன்றம் பேரூர் கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆர்.டி. சுதாகர், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜெ.ஜெய்மதன் ஆகியோர் தலைமையில் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியம் கீழாமூர் ஊராட்சியில் திராவிட மாடல் சாதனையை எடுத்துச் சொல்லி வீடு வீடாகச் சென்று செங்குன்றம் பேரூர் கழக திமுக நிர்வாகிகள், உறுப்பினர்கள் தீவிர வாக்கு சேகரித்தனர்.

பழனி கோயில் நில மோசடி வழக்கின் குற்றம்சாட்டப்பட்ட வெள்ளத்துரை மற்றும் சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் ஆகியோருக்கு ஜாமின் வழங்க உச்சநீதிமன்றம் மறுப்பு

வழக்கின் புலன் விசாரணை நடைபெற்று வருவதால், தற்போது இவர்களுக்கு ஜாமீன் வழங்கக் கூடாது என தமிழ்நாடு அரசு எதிர்ப்பு தெரிவித்தது

இதனையடுத்து நீதிபதிகள் பழனி கோயில் நிலம். விவகாரத்தில், ஜாமீன் கோரிய வெள்ளத்துரை மற்றும் ஜஸ்டின் மணிகண்டன் ஆகியோரது மனுவை தற்போது பரிசீலித்து எந்த உத்தரவு பிறப்பிக்க முடியாது என தெரிவித்த நீதிபதிகள் வழக்கை நவம்பர் முதல் வாரத்துக்கு ஒத்தி வைத்தனர்



**திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே சண்முக நதி அருகே கோவை மெயின் ரோட்டில் குப்பை கிடங்கு உள்ளது அந்த குப்பை கிடங்கில் நேற்று இரவு திடீரென தீ பற்றியது தீ பற்றியதுடனே மலவென தீ கட்டுக்கு அடங்காமல் எளிய தொடங்கின உடனே அருகில் உள்ள பொதுமக்கள் பழனி தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் கொடுக்கப்பட்டது உடனடியாக தீயணைப்பு போலீசார்கள் விரைந்து வந்து தீயணைத்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர் இதனால் சிறிது நேரம் அப்பகுதி முழுவதும் புகைமூட்டமாக காணப்பட்டது**

# மாநில அரங்கில் திருவண்ணாமலை ஊர்க்காவல் படைக்கு மாபெரும் வெற்றி!

## உடற்பயிற்சியில் 2ம் இடம், ஒழுக்கத்திலும் முதலிடம் - ஒட்டுமொத்த தொழில்முறை போட்டியிலும் அசத்தல்

திருவண்ணாமலை: செப்.26

தேனியில் நடைபெற்ற ஊர்க்காவல் படையின் 30 வது மாநில அளவிலான தொழில்முறை மற்றும் விளையாட்டுப் போட்டிகளில், திருவண்ணாமலை மாவட்ட ஊர்க்காவல் படையினர் சிறப்பான திறமையை வெளிப்படுத்தி மாநில அளவில் பல்வேறு பரிசுகளைவென்றுமாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். மாநிலம் முழுவதும்இருந்துஊர்க்காவல் படையினர் பங்கேற்ற இந்தப் போட்டிகளில், திருவண்ணாமலை மாவட்ட ஊர்க்காவல் படையினர் உடற்பயிற்சிப் போட்டியில் மாநில அளவில் 2ம் இடத்தைப் பிடித்து சாம்பியன் பட்டம் வென்றனர். உடல் தகுதி, ஒழுக்கம், ஒருங்கிணைப்பு மற்றும் துல்லியமான செயல்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்தி அவர்கள் இந்த சாதனையைப் பதிவு செய்தனர். மேலும், முதலுதவி பயிற்சிப் போட்டியிலும் சிறப்பாக செயல்பட்டு பரிசுத் தொகையை பெற்றனர். அவசர காலங்களில் பொதுமக்களுக்கு உடனடி உதவி வழங்குவதற்கான தங்களது திறமையையும் பயிற்சியையும் போட்டியின் மூலம் வெளிப்படுத்தினர்.

வேலூர் சரக அணிக்கும் இரட்டை பெருமை

வேலூர் சரகத்திற்கு உட்பட்ட திருவண்ணாமலை, வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்ட ஊர்க்காவல் படையினர் இணைந்து பங்கேற்ற வேலூர் சரக அணி, போட்டிகளில் சிறப்பாக செயல்பட்டு ஒழுக்கத்திற்கான முதலாம் விருதையும், ஒட்டுமொத்த தொழில்முறை பிரிவில் 2ம் இடத்தையும் பெற்று சாதனை படைத்தது. தொடர்ச்சியான பயிற்சி, கட்டுப்பாடு, அணியாக செயல்படும் திறன் மற்றும் கடமை உணர்வுடன் போட்டிகளில் பங்கேற்ற ஊர்க்காவல் படையினரின் செயல்பாடு பாராட்டைப் பெற்றது.

வெற்றி வீரர்களுக்கு காவல் கண்காணிப்பாளர் பாராட்டு

போட்டிகளில் வெற்றி பெற்று திரும்பிய திருவண்ணாமலை மாவட்ட ஊர்க்காவல்படையினரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் R. உதயகுமார் நேரில்அழைத்து பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தார்.

துணை கண்காணிப்பாளர் சிவானுபாண்டியன் உடனிருந்தார். வெற்றிக்கு காரணமான வீரர்களின் கடின உழைப்பு மற்றும் தொடர்பயிற்சியை காவல் துறை அதிகாரிகள் பாராட்டினர்.



இந்நிகழ்வில் வட்டார தளபதி A. சங்கர், உதவி வட்டார தளபதி S. கீதா, உதவி ஆய்வாளர் S. சக்திவேல், படைத்தளபதி E. சுரேஷ்குமார், எழுத்தர் C. ஜெயந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற ஊர்க்காவல் படையினரை பாராட்டினர். மாநில அளவிலான போட்டியில் திறமையை நிரூபித்து திருவண்ணா மலை மாவட்டத்திற்கும், வேலூர் சரகத்திற்கும் பெருமை சேர்த்த ஊர்க்காவல் படையினருக்கு காவல்துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் சார்பில் பாராட்டுகளும், வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டன.

# 20 ஆண்டுகளாக குண்டும் குழியுமாக கிடக்கும் செண்பகத்தோப்பு சாலை;இனியும் பொறுக்க முடியாது என பொதுமக்கள் சாலை மறியல்

## அதிகாரிகள் உடனடியாக சீரமைக்க வலியுறுத்தல்

போளூர்,செப்.26

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்துக்குட்பட்ட படைவீடு மற்றும் கானமலை ஊராட்சிகளில் உள்ள துரிஞ்சாபுரம், பெருமாள் பேட்டை, மேல்செண்பகத்தோப்பு, கீழ்செண்பகத்தோப்பு உள்ளிட்டகிராமங்களுக்கு செல்லும் முக்கிய சாலை கடந்த 20 ஆண்டுகளாக சீரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாக காணப்படுவதாக கூறி, பொதுமக்கள் கடும் அதிருப்தி தெரிவித்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



திருவண்ணாமலை மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா மற்றும் நீர்வளப் பகுதிகளில் ஒன்றாக விளங்கும் செண்பகத் தோப்பு அணைக்கு செல்லும் முக்கிய வழித்தடமும் இதுவாகும்.

இந்த சாலையை சுற்றியுள்ள கிராமங்களில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

ஆனால், பல ஆண்டுகளாக முறையான பராமரிப்பு இல்லாததால் சாலையில் ஆங்காங்கே பெரிய பள்ளங்களும், குழிகளும் ஏற்பட்டுள்ளன. இதனால் இருசக்கர வாகனங்கள், கார்கள், பேருந்துகள் உள்ளிட்ட வாகனங்கள் செல்வதில் கடும் சிரமம் ஏற்படுவதுடன், மழைக்காலங்களில் நிலைமை மேலும் மோசமடைவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

20 ஆண்டுகளாக கோரிக்கை... தீர்வு மட்டும் இல்லை!

சாலையை சீரமைக்கக் கோரி பல்வேறு காலகட்டங்களில் கிராம மக்கள் சார்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மனுக்கள் அளிக்கப்பட்டதாகவும், பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும்கூறப்படுகிறது. இருப்பினும் இதுவரை நிரந்தரத் தீர்வு கிடைக்கவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டினர்.

இந்நிலையில், நீண்டகாலமாக கிடப்பில் உள்ள செண்பகத்தோப்பு சாலைப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என்பதை வலியுறுத்தி, இன்று திருவண்ணாமலை – வேலூர் நெடுஞ்சாலையில் சந்த வாசல் பகுதியில் பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. சாலையை உடனடியாக ஆய்வு செய்து, சீரமைப்புப் பணிகளை தொடங்க வேண்டும் என்றும், கிராம மக்களின் நீண்டகால போக்குவரத்து சிரமத்திற்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

“இனியும் காலதாமதம் வேண்டாம்!”

செண்பகத்தோப்பு சாலை விரைவில் சீரமைக்கப்படாவிட்டால், அடுத்தகட்டமாக மேலும் தீவிரமான போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

20 ஆண்டுகளாக நீடித்து வரும் இந்த சாலைப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து, ஆயிரக்கணக்கான மக்களின் அன்றாட போக்குவரத்து சிரமத்தை போக்க அதிகாரிகள் உடனடியாகநடவடிக்கைஎடுக்க வேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் அனைத்து துறைகளின் பணிகள் குறித்து செய்தியாளர்களுடன் ஆய்வு

திருவண்ணாமலை செப்.26

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் அனைத்து துறைகளின் பணிகள் குறித்து செய்தியாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் இன்று (24.09.2026) கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் அனைத்து துறைகளின் பணிகள் குறித்து செய்தியாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோணலூர் ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடையில் பொருட்களின் இருப்பு குறித்தும், பொருட்கள் முறையாக விநியோகிக்கப்படுகிறதா என்பது குறித்தும், பொருட்கள் வழங்கியதற்கான பதிவேடுகளில் விவரம் முறையாக பதிவு செய்யப்படுகிறதா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, கோணலூர் ஊராட்சி அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் வருகை பதிவேடு மற்றும் குழந்தைகளின் எடை மற்றும் உயரம் குறித்த விவரங்கள் பதிவேடுகளில் முறையாக பதிவிடப்பட்டுள்ளதா என்பது குறித்தும், குழந்தைகளுக்கு சுகாதாரமான உணவு வழங்கப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டு, ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளியின்அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும் பொதுமக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று ஊராட்சி உன்றிய ஆரம்பப் பள்ளியில் மழைநீர் தேங்காத வண்ணம் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களை அறிவுறுத்தி, பள்ளியை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து நாடழுகானந்தல் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் ரூ.9,80,000 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நாற்றாங்கால் பண்ணையில் பல்வேறு வகையான மரச்செடிகள் வளர்க்கப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு நாற்றாங்கால் பண்ணையில் மரக்கன்றை நட்டு வைத்தார். மேலும் இராஜந்தாங்கல் ஊராட்சியில் ஊராட்சி பொது நிதியின் கீழ் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய பயணியர் நிழற்குடையையும், ரூ.8 இலட்சத்து 44 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய மதிய உணவு கூடம் கட்டப்பட்டு வருவதை ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து வேட்டவலத்திலுள்ள சமூக நீதி பள்ளி மாணவியர் விடுதியிலும், வேட்டவலம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் அடிப்படை வசதிகளை ஆய்வு மேற்கொண்டு மாணவிகளுடன் கலந்துரையாடி பொது தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி அளித்த ஆசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கி ஆசிரியர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார். மேலும் ரூ.1 கோடியே 44 இலட்சத்து 27 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள புதிய 07 வகுப்புறை கட்டிடத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வேட்டவலம் பேரூராட்சி இராஜாஜி தெருவிலுள்ள அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் எடை மற்றும் உயரம் குறித்த விவரங்கள்மற்றும் குழந்தைகளுக்கு சுகாதாரமான உணவு வழங்கப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டு குழந்தைகளின் வருகை பதிவேடுகளை பார்வையிட்டார்.

வேட்டவலத்திலுள்ள மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிய கூழ்மப்பிரிப்பு நிலையம் (Dialysis Centre) அமைக்கப்பட்டு வருவதையும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் (RO Plant) அமைக்கப்பட்டு வருவதையும், மருந்து இருப்புகள், அளிக்கப்படும் சிகிச்சை முறைகளை ஆய்வு கொண்டார். மேலும் புதிய சார் பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு ஏதுவாக அனுகுமலை ஊராட்சி மற்றும் வேட்டவலம் பேரூராட்சி பகுதிகளில் உள்ள இடங்களில் செய்தியாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மதுசெழியன், செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) சிவநாத், உதவி இயக்குநர் (ஊராட்சிகள், திருவண்ணாமலை கிழக்கு) விமலன், திட்ட அலுவலர் (ஒருகிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம்) அன்பரசி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் லட்சுமி.கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர் இந்திரா, வேட்டவலம் பேரூராட்சி செயல் அலுவலர் வரலட்சுமி, மற்றும்துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி சார்பில் காலை உணவுத் திட்டம், இடைத்தேர்தல், மின்வெட்டு, மின்கட்டணம் உயர்வு, ஆவின் பால் தட்டுப்பாடு உள்ளிட்டவைகள் குறித்த பத்திரிகையாளர் சந்திப்பு

## மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திமுகவிற்கு ஆதரவு

பெரம்பூர், செப்டம்பர் 26:

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி சார்பில் காலை உணவுத் திட்டம், இடைத்தேர்தல், மின்வெட்டு, மின்கட்டணம் உயர்வு, ஆவின் பால் தட்டுப்பாடு உள்ளிட்டவைகள் குறித்த பத்திரிகையாளர் சந்திப்பு

மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திமுகவிற்கு ஆதரவு




ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி சார்பில் மாநில தலைமையகத்தில் மாதாந்திர பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சி சென்னை பெரம்பூர் ஜமாலியா ஐஐசி அரங்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், நாட்டில் தற்போது முக்கியத்துவம் பெற்றுள்ள பல்வேறு சமூக மற்றும் தேசியப் பிரச்சினைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

குறிப்பாக பெருந்தலைவர்காமராஜர்காலை உணவுத் திட்டம் விரிவாக்கம், மதுராந்தகம், தாராபுரம் இடைத் தேர்தல், மின்வெட்டு, மின் கட்டணம் உயர்வு மற்றும் ஆவின் பால் தட்டுப்பாடு குறித்து பல்வேறு நிகழ்வுகள் குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி மாநிலத் தலைவர் மௌலவி ஏ. முஹம்மது ஹனீஃபா மன்பயீ பத்திரிகையாளர்களிடம் விரிவாக உரையாற்றினார்.

இந்நிகழ்வில் பங்கேற்ற பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நிருபர்கள் மற்றும் யூடியூபர்கள் பல்வேறு முக்கியமான பல கேள்விகளை முன்வைத்தனர். பின்னர் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கும் விரிவாக பதிலளித்தார்.

குறிப்பாக, ஜெம் கிரானைட்ஸ் வீரமணி பாலியல் வழக்கில் காவலர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகள் குறித்தும், தமிழகத்தில் பல்கலைக்கழகங்கள் நிறுவுவதற்கான சட்டத்திருத்த மசோதா, தமிழ்நாடு அரசு சார்பில் முஸ்லிம் மாணவர்கள் வெளிநாட்டில் மேற்படிப்பு, ஆய்வுப் படிப்பிற்காக தமிழகம் முழுவதுமிலிருந்து 10 மாணவர்கள் என்ற எண்ணிக்கையை உயர்த்துவதற்கு கோரிக்கை வைக்கப்படுமா? தமிழ்நாட்டில் வக்ஃப் வாரியம் சார்பில் பள்ளிவாசல்களில் புதிதாக கட்டப்படும் கட்டிடங்களுக்கு வரப்பட்டுள்ள வட்டியில்லா கடன் வழங்குவது உள்ளிட்ட பல்வேறு முக்கியமான கேள்விகளை பத்திரிகையாளர்கள் முன்வைத்தனர். அவற்றிற்கு மாநிலத் தலைவர் மௌலவி ஏ. முஹம்மது ஹனீஃபா மன்பயீ விரிவான விளக்கங்களுடன் பதிலளித்து மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் திமுகவிற்கு தங்களுடைய ஆதரவு என்பதையும் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாநிலத் துணைத் தலைவர்கள் டி.யூசுப் பாஷா, கே.எம். சிராஜ் அஹ்மத், மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் டி.அஜீஸ் லுத்புல்லாஹ், வி.எஸ். முஹம்மது அமீன், எஸ்.என். சிக்கந்தர், மாநில அமைப்புச் செயலாளர் கே. ஜலாலுதீன், மாநில மகளிர் அணி செயலாளர் பாத்திமா ஜலால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சியை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி மாநில ஊடகச் செயலாளர் எஸ்.சாகுல் ஹமீது தொடங்கி வைத்து, நிகழ்வை ஒருங்கிணைத்து வழிநடத்தினார்

தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., மாவட்ட முதன்மைகல்வி அலுவலககூட்டரங்கில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற உயர்வுக்குப் படி (2026, 27), உயர்வுக்கு வழிகாட்டி முகாமில் இராணிப்பேட்டை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பயின்று நீட் தேர்வில் வெற்றி பெற்று 7.5 இட ஒதுக்கீட்டின் கீழ் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில் MBBS சேர்ந்துள்ள மாணவர் S. சுனில் குமார் அவர்களை சால்வை அணிவித்து கௌரவித்து வாழ்த்து தெரிவித்தார்கள். உடன் முதன்மை கல்வி அலுவலர் M.மோகனா மற்றும் மாவட்ட கல்வி அலுவலர் துரைவேல் மற்றும் பலர் உள்ளனர்

# தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை சார்பில் மீட்பு உபகரணங்கள் பொதுமக்களின் பார்வைக்கு...

செங்குன்றம், செப்டம்பர் 26:



தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை சார்பில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அம்பத்தூர் மாவட்ட உதவி அலுவலர் ராமதாஸ் தலைமையில் பருவமழையினால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டால் அவர்களை மீட்கக் கூடிய உபகரணங்களை பொதுமக்களின் பார்வைக்காக செங்குன்றம் நெல் அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தில் நடைபெற்றது.

இதில் தீயணைப்புத் துறை நிலைய அலுவலர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியம், பாடியநல்லூர் ஊராட்சி மகாமேரு நகர் பகுதியில் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை சார்பில் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு வெள்ள தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாகவெள்ளநீர்போக்குகால்வாய்களைதூர்வாரிசுத்தப்படுத்தும்பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா நேரில் ஆய்வு மேற்கொண்டு பணிகளை போர்காலஅடிப்படையில்துரிதமாகமேற்கொள்ளசம்பந்தப்பட்டஅலுவலர்களுக்கு உத்தரவிட்டார். துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



# வில்லிவாக்கம் ஒன்றியம் மோரை ஊராட்சியில் 3 புதிய டிரான்ஸ்பார்மர்கள் துவக்க விழா

செங்குன்றம், செப்டம்பர் 26:

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியத்திற்கு உட்பட்ட மோரை ஊராட்சி சுபாஷ் நகர், குமரன் நகர், ஸ்ரீ லட்சுமி அம்மன் நகர் ஆகிய பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக புதிதாக 3 மின்மாற்றிகள் (டிரான்ஸ்பார்மர்கள்) துவக்க விழா ஆவடி கோட்டம் மின் பகிர்மானசெயற்பொறியாளர் கிறிஸ்டோபர் லியோ ராஜ் தலைமையில் நடைபெற்றது. உதவி செயற்பொறியாளர் ராஜேஷ்சன், உதவி பொறியாளர் கோகுல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம்.எல். விஜய் பிரபு சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 3 புதிய மின்மாற்றி டிரான்ஸ்பார்மர்களை துவக்கி வைத்து பொதுமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார். குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகள், பொதுமக்களிடம் எம்.எல். விஜய் பிரபு எம்எல்ஏ குறைகளை கேட்டறிந்தார். பொதுமக்கள் வழங்கிய மனுக்களை படித்து உடனடியாக தன்னுடைய உதவியாளரிடம் அந்தந்த துறை சார்ந்த அதிகாரிகளுக்குஅனுப்பி வைக்க எம்எல்ஏ பரிந்துரை செய்தார்.

இந்நிகழ்ச்சியில் தவெக ஒன்றியச் செயலாளர்கள் மணிமாறன், மணிவேல், வி.ஜெய்சங்கர், மேகநாதன், மைக்கேல் ராஜன், செல்வக்குமார், முகிலன், தவெக நிர்வாகி மோரை பாலகிருஷ்ணன் உள்ளிட்ட மின்வாரிய ஊழியர்கள், பொதுமக்கள், குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA